For Private Circulation Only

ECHOES INDIA

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

நவம்பர் 2014

மலர் 7, இதழ் 6





# மணப்பாக்கம் செய்திகள்

## ஆகஸ்ட் 2014

### 3 ஆகஸ்ட், ஞாயிறுக்கிழமை

மாஸ்டர் சத்சங்கம் நடத்தியபின்னர் ஒரு திருமணத்தையும் நடத்தி வைத்தார். அவரை ட்யூபுகள் (நோயுற்று இருந்த போது போட்டப்பட்ட மருந்து குழாய்கள்) இல்லாமல் பார்ப்பது அவரின் உடல் நிலை தேறி வருவதை காட்டியது. பின்னர் அவர் தன்னுடைய அலுவலகத்திற்கு சென்ற போது, பல அப்யாசிகள் அவருடன் சேர்ந்து போட்டோகள் எடுத்துக் கொண்டனர். அங்கு ஒரு மகிழ்ச்சியான பண்டிகை கால சுழல் நிலவியது. அதனை தொடர்ந்து மாஸ்டர் மிகச் சோர்வாக இருந்ததால் அன்றைய மீத தினத்தை ஓய்வெடுப்பதில் செலவிட்டார்.

ஹிப்னாடிசம் பற்றிய சுவாரசியமான ‘Somewhere in Time’ என்ற திரைப்படத்தை இரவு 9 மணி முதல் தொடங்கி இரண்டு மணி நேரம் படம் முழுவதையும் பார்த்தார்.

இவ்வாரம் முழுவதும் மாஸ்டருக்கு காலை 6 மணியளவில் விழிப்பது, பிஸியொதெரபி, அவரின் அலுவலக மேஜையில் அமர்வது, செய்தித்தாள்கள் வாசிப்பதை கேட்டுக்கொண்டே காலை சிற்றுண்டி அருந்துவது, அதற்குப்பின் சூரிய ஒளியில் அமர்வது என வழக்கமாக இருந்தது.

4ம் தேதி அன்று காலை சுமார் 8:45க்கு வெளியில் வந்த அவர், அங்கிருந்த சில அப்யாசிகளுக்கு ஒரு சின்ன சிட்டிங் கொடுத்தார். உள்ளே சென்ற அவர், பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் அப்யாசி ஒருவரைப் பற்றிய TV பேட்டியை பார்த்தார். அப்பேட்டியில் மிகுந்த ஆர்வமேற்பட்டு சுமார் 1/2 மணி நேரத்திற்கும் மேலாக பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் Michael Sandel இயக்கிய Justice தொடரின் ஒரு பாகத்தைப் பார்த்தபின்னர், அது தனக்குப் பிடித்த தொடர்களில் ஒன்று எனக்கூறினர்.

### 5-7 ஆகஸ்ட் 2014

மாஸ்டரின் காலை சிற்றுண்டிக்கு பின்னர், ஒரு சகோதரி அவரிடம் "நான் உங்கள் இடத்திலிருந்து தள்ளி தொலைவில் வசித்து வருகிறேன், ஆனால் ஒருபோதும் நீங்கள் என்னைவிட்டு விலகி இருப்பதாக தோன்றியதில்லை" கூறினார். அதற்கு மாஸ்டர், "அதுதான் நிரந்தர நினைவிக்கான (constant rememberance) சக்தி. நாம் எங்கிருந்தாலும், நம்முடன் மாஸ்டர் கூடவே இருக்கிறார்" எனக் கூறினார்.

காலை சிற்றுண்டிக்குப்பின், சூரிய ஒளியில் வெகு நேரம் அமர்ந்திருந்தார். சகோ.ஜாக்கியிடம் காஸா பகுதியில் போரின் நடப்பு நிலவரம் பற்றிக்கேட்டார். அவருக்கு இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையேயான இந்த மோதலின் வரலாற்றைப்பற்றி அறிய ஆர்வமிருந்தது. சகோ.ஜாக்கி கூறிய பல்வேறு கருத்துக்களை மிகக் கவனமாகக் கேட்டபின், "இந்த போர்களுக்கான ஒரு முக்கிய காரணம் மதம் தான்" என்றார். பின்னர் சுமார், 11:30 மணியளவில், தனது அறைக்குத் திரும்பினார்.

6ம் தேதியன்று, மாஸ்டரைச் சந்திக்க வந்த ஒரு அப்யாசியிடம், "நீங்கள் சத்சங்கங்களில் கலந்து கொள்வதில்லை எனக் கேள்விப்பட்டேன். என்ன ஆயிற்று?" எனக்கேட்டார். அந்த அப்யாசி மௌனமாக இருந்த போது, மாஸ்டர் "மிஷனுக்கு பணியாற்றுவது மட்டும் போதாது. மிஷன் பணிகளில் ஈடுபடுவது நம் கடமையாகும். அது ஆன்மீக முன்னேற்றத்தைத் தராது. அப்யாசிகள் தங்களது சாதனாவை விடாமல் செய்து வரவேண்டும்" என அறிவுறுத்தினார். 7ம் தேதியன்று ஒரு அப்யாசி புதிதாக வாங்கியிருந்த காரைப் பார்க்க வந்தார். அவருக்கு அக்காரின் பல்வேறு அம்சங்களைப் பற்றிக்கேட்டறிந்தும், சாமான்கள் வைப்பதற்கான இடம் பெரிதாக இருந்ததும் ஆச்சரியப்பட வைத்தது. பின் வெளியில் அமர்ந்த அவர், அங்கிருந்த அனைவருக்கும் ஒரு சிட்டிங் கொடுத்தது, காலை 9 மணி சத்சங்கத்தின் நேரத்தை ஒட்டி அமைந்திருந்தது.

**விஸ்பர் செய்திகளைப்பற்றிய கலந்துரையாடல்:** 9ம்



செய்தி கேட்டதற்கு, "அவர் நேசிக்கும் அனைவரையும் sநேசியுங்கள்" என்று மாஸ்டர் கூறினார்.

லாலாஜி மகராஜ் அவர்களின் *மகாசமாதி* நாள் என்பதால், மாஸ்டர் களைப்புடன் இருந்தும், காட்டேஜில் இருந்தவர்களுக்கு குறைந்த நேர சிட்டிங் கொடுத்தார்.மேலும் சகோ.கம்லேஷ் தியான கூடத்தில் சத்சங்கம் நிகழ்த்தினார். சத்சங்கத்திற்கு பின் படித்த விஸ்பரில், இந்நாளின் முக்கியத்துவம் பற்றியும், அவர் நினைவில் எவ்வாறு ஒருவர் இருப்பது என்பது பற்றியும் இருந்தது.

தேதியன்று விஸ்பர் செய்திகளின் சிலவற்றை ஒரு அப்யாசி வாசித்த போது, மாஸ்டர் அச்செய்திகளை புத்தகத்தின் மூலம் கவனித்துக் கொண்டிருந்தார். பின்னர், "நான் hierarchy என்ற சொல்லை முன்னரே பயன் படுத்தி வந்தேன், அந்த சொல்லை, பாபுஜி இப்போது விஸ்பர் செய்திகளில் பயன்படுத்தி வருகிறார்" எனக்கூறியது அங்கிருந்த அனைவருக்கும் சிரிப்பை வரவழைத்தது.

பதினெட்டு வயதிற்குட்பட்ட நான்கு இளம் சிறுவர், சிறுமிகள் பயிற்சியைத் துவங்க இருந்தனர், அவர்களுக்கு சிட்டிங் கொடுப்பதில் மாஸ்டர் மிகவும் விருப்பத்துடன் இருந்தார். இருப்பினும், அவர் களைப்புடன் இருந்ததால், சகோ.கம்லேஷ், அவர்களுக்கு சிட்டிங் கொடுக்க ஒப்புக் கொண்டார்.

ஆகஸ்ட் 10ம் தேதி **ரக்ஷா பந்தன்** (சகோதர, சகோதரிகளுக்கு இடையே உள்ள அன்பை கொண்டாடும் நாள்). மாஸ்டர் காலை 6.30மணிக்கு எழுந்தார். மொராதாபாத்திலிருந்து வந்திருந்த சகோதரி, மாஸ்டரின் கையில் *ராக்கி* (புனித நூல்) கட்டி விட்டார். மாஸ்டருடைய குடும்பத்தினர் வந்திருந்தனர், மாஸ்டர் உற்சாகமாக இருந்தார். அவர் காலை உணவு உண்ணும் போது, சகோ.கம்லேஷ் தியானக் கூடத்தில் ஞாயிறு சத்சங்கம் நிகழ்த்தினார். செய்தித்தாளை ஒருவர் படிக்க மாஸ்டர் கண்களை மூடி கவனித்தார். சத்சங்கம் முடிந்த உடனேயே, மாஸ்டர் உள்ளே செல்ல விருப்பம் தெரிவித்தார்.

அதற்கு பின், மாஸ்டர் வெளியில் வந்து சூரிய வெளிச்சத்தில் வந்து அமர்ந்தார். அவரைச் சுற்றி அனைவரும் அமைதியாய் அமர்ந்திருந்தனர். இரண்டு சகோதரிகள் முன் வந்து அவர்களும் மாஸ்டரின் கையில் ராக்கி கட்டினர்.

## வியாழன், 14 ஆகஸ்ட் 2014

காலை உணவையும், செய்தித்தாளையும் படித்து முடித்த பின், மாஸ்டர் நிறைய அப்யாசிகளை சந்தித்தார். மேலும் அவர்களின் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்தார். சீனாவிலிருந்து வந்திருந்த ஒரு சகோதரி உள்ளே வந்து, "இன்று காலையில் உங்களைக் காண்பது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது" என்று சீன மொழியில் கூறியதற்கு, "இன்று காலையில் உங்களை கண்டது மகிழ்ச்சி அனைத்து மொழிகளிலும்" என்று மாஸ்டர் கூறியவுடன் அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர். மாஸ்டர் களைப்பாக இருந்தும், ஒரு எளிமையான வாக்கியத்தால் அந்த சூழ்நிலையை இலகுவாக்கினார். ஒரு சகோதரி தான் அன்று கிளம்புவதாகக் கூறி, வாழ்க்கையில் தான் பின்பற்ற மாஸ்டரிடமிருந்து ஒரு

## வெள்ளிக்கிழமை, 15 ஆகஸ்ட் 2014

இந்திய சுதந்திர தினம் என்பதால், மண்டல பொறுப்பாளர், வினீத் ரனாவத், தியானக்கூடத்திற்கு அருகில் காலை 6.30 மணிக்கு கொடி ஏற்றினார். சகோ.கம்லேஷ் காலை 9.00 மணி சத்சங்கம் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஒரு திருமணமும் நடந்தது. சில நாட்களாக மாஸ்டர் உடல் நலமின்மையாக இருந்தது, திரும்பவும் அவரின் உடல் நலத்தை பாதிக்குமோ என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், டாக்டர்கள் முன்கூட்டியே பிரச்சனையை அறிந்து, மருந்து கொடுத்தால், மாஸ்டருக்கு அதிகம் பாதிக்கவில்லை.

## ஞாயிற்றுக்கிழமை, 31 ஆகஸ்ட் 2014

மாஸ்டர் காலை 7.30 மணியளவில் எழுந்து, அவரது மின் அஞ்சல்களை பார்த்தார். பின்னர் அவர் காலை உணவை முடித்து, நீண்ட நேரம் செய்தித்தாள் படித்தார். பின் சிறிது களைப்புடன் இருந்ததால் அவரது உறங்கும் அறைக்கு சென்றார். அனைவரும் அவர் ஓய்வெடுக்க செல்கிறார் என்று நினைக்க, அவர் வெளியிலுள்ள நிழலில் வந்தமர்ந்து ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். நிறைய தலைப்புகளில் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். "மாஸ்டர், நான் அன்பை ஒரு உந்துதலாக நினைத்ததில்லை. அன்பு எவ்வளவு அற்புதமானது என்பதை சகஜ மார்க்கம் வந்த பின்னரே அறிந்து கொண்டேன்" என்று ஒரு அப்யாசி கூறினார். ஆசிரமங்களை பற்றி மாஸ்டர் கூறுகையில், "முப்பது அல்லது அதற்கு மேல் அப்யாசிகள் இருப்பின் ஆசிரமங்கள் தேவை. ஏனெனில் சிட்டிங்கிற்காக ஒருவரது வீட்டிற்கு செல்ல அப்யாசிகளுக்கு அசௌகரியமாக இருக்கக் கூடாது, மேலும் சிட்டிங்குகள் ஆசிரமத்திலேயே நடைபெறும்." எனக் கூறினார்.









## செப்டம்பர் 2014

### வெள்ளிக்கிழமை, 12 செப்டம்பர் - துவாரகாவில் தங்கியது

ஆசிரமத்திற்கு பின்புறம் இருக்கும் துவாரகா குடியிருப்புப் பகுதிகளில் மாஸ்டர், தனது குடியிருப்பை திறந்து வைத்தார். லேசான மழைத்தூரல் இருந்த போதிலும், மாஸ்டர் கிளம்பி கோல்~ஃப் கார்ட்டில் சென்றார். அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் சத்சங்கம் நடத்தினார். சிட்டிங்குக்கு பின், மாஸ்டர் மிகுந்த களைப்புடன் இருந்த போதிலும், அவர் அழைத்திருந்த விருந்தினர்களுக்கு பரிசுகளை வழங்கி முடிக்க விரும்பினார். மருத்துவர்கள் அவரது உடல்நிலை காரணமாக அவரை ஓய்வெடுக்குமாறு கூறியிருந்த போதிலும் மாஸ்டர் தமது மனோபலத்தை விரிவுபடுத்தியதன் மூலம் தமது பணிகளையெல்லாம் முடித்த பிறகு, சற்று ஓய்வெடுத்தார்.

மாலையில் மாஸ்டர் சுமார் முப்பது அப்யாசிகளுடன் சிறிது நேரம் அமர்ந்திருந்து, பின்னர் உள்ளே திரும்பச் சென்றார். அவர் அன்று மாலையிலேயே உறங்கச் சென்று விட்டார்.

**சனிக்கிழமை, 13 செப்டெம்பர்:** காட்டேஜுக்குத் திரும்ப வந்த மாஸ்டர் மிகவும் களைப்பாக இருந்ததால், அன்று முழுவதும் ஓய்வெடுத்தார்.

**15-19 செப்டெம்பர்:** இந்த வாரம் முழுவதும் மாஸ்டர் பெரும்பாலும் ஓய்வெடுத்துக் கொண்டு எப்பொழுதாவது வெளியே அலுவலறைக்கு வந்து காலைச்சிற்றுண்டி அல்லது மதிய உணவு உட்கொண்டு, பின்னர் தமது படுக்கையறைக்குச் சென்று விடுவார். மாஸ்டர் எவரையும் சந்திக்க இயலாமல் இருந்ததால், காட்டேஜில் அப்யாசிகள் மாஸ்டரை சந்திப்பது வரையறைப் படுத்தப் பட்டிருந்தது. எனினும் அவர் அலுவலறைக்கு வரும் போது யாராவது அப்யாசிகள் இருந்தால் அவர்களை சிறிது நேரம் சந்தித்துப் பேசினார். சென்னையின் வானிலையும் மேகமூட்டமும் மழையுமாய், காட்டேஜின் சுறுசுறுப்பில்லாத சோர்ந்த நிலவரத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. பொதுவாக இம்மாதம், மாஸ்டர் காட்டேஜுக்குள்ளேயே பெரும்பாலும் அடைபட்டிருந்தார்.

காலை வேளைகளில் காலைச்சிற்றுண்டியும் செய்தித்தாள் வாசிப்பதும் ஆனபிறகு, சில சமயங்கள் மாஸ்டர் வெளியே வந்து வெயிலில் அமர்ந்து, சகோதரி எலிசபெத்திடம் பாபுஜி மகாராஜின் சில கடிதங்களையும் கட்டுரைகளையும் படிக்குமாறு கூறுவார். சகோதரி எலிசபெத் ஒரு புதிய மிஷன் வெளியீட்டுக்காக அவற்றைத் தொகுத்துக் கொண்டிருக்கிறார். வெளியே வந்து வெயிலில் அமரும் போது சோர்வும் தூக்கமுமாய் இருக்கும் மாஸ்டர், சகோதரி எலிசபெத் பாபுஜியின் எழுத்துக்களை படிக்க ஆரம்பித்ததும் அதில் ஆழ்ந்து விடுவார். சுற்றிலும் அப்யாசிகள் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருக்க, அவ்விடத்தில் பரிபூரணமான அமைதி நிலவும். இப் படிப்பு நேரம் முடிந்தவுடன் ஒளிமயமாய்க் காணப்பட்ட மாஸ்டர், தமது அறைக்குத் திரும்புகையில் மகிழ்வுடன் அப்யாசிகளை சந்திப்பதை ஒருவர் காண முடிந்தது. இது மாஸ்டரது வழக்கமான நடைமுறையிலிருந்து ஒரு மிகவும் விரும்பத்தக்க மாறுதலாக இருந்ததால் அவர் உண்மையாகவே அதனை அனுபவித்தார்.





## ஆப்பிரிக்கா கருத்தரங்கு- ஒன்று கூடி இருத்தல்

**13-21 ஆகஸ்ட் 2014**

ப்ரெஞ்சு பேசும் ஆப்பிரிக்க நாடுகளுக்கான ஒரு வார கருத்தரங்கு மணபாக்கத்தில் நடந்ததில், அங்கோலா, கேமரூன், காங்கோ (ப்ரஸாவில்), கோதெ டிஐவயோர் ( ஐவரி கடற்கரை) மற்றும் கபன் ஆகிய இடங்களிலிருந்து 12 அப்யாசிகள் கலந்து கொண்டனர். 'ஒன்று கூடி இருத்தல்' பற்றிய தேவையையும், முக்கியத்துவத்தையும் வலியிறுத்திக் கூறப்பட்டிருந்த 'விஸ்பர்ஸில்' இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் குறித்து அப்யாசிகள் கலந்து பேசினர். கோத்டெ டிஇமாவரிலிருந்து ஒரு சகோதரி அப்யாசியும், அங்கோலாவின் ஒரு சகோதர அப்யாசியும் மாஸ்டரால் பிரிபெக்ட் ஆக்கப்பட்டனர்.

கருத்தரங்கு முடிவடைவதற்கு முன்தினம் மாஸ்டர் அனைத்து பங்கேற்பாளர்களையும் காட்டேஜுக்கு அழைத்து சத்சங்கம் நடத்தினார். அது மிகவும் ஆழமானதாகவும், உள்ளார்ந்ததாகவும் இருந்தது. ஒரு கேள்வி-பதில் நிகழ்ச்சியும், சகோ. கம்லேஷுடன் பயிற்சியின் பல்வேறு அங்கங்களின் முக்கியத்துவத்தையும் குறித்து ஒரு ஆழமான விழிப்புணர்வு நிகழ்ச்சியும் இருந்தது. அவர் உரையை முடிக்கும் போது அனைத்து அப்யாசிகளும் ஆழ்ந்த ஆன்மீக நிலையில் திளைத்திருந்தனர்.

## ஓணம் கொண்டாட்டம்

**6-8 செப்டம்பர் 2014**

சுமார் 350 அப்யாசிகள், கேரளாவிலிருந்து, கேரள திருவிழாவான ஓணத்தினை மாஸ்டருடன் கொண்டாட மணப்பாக்கம் வந்திருந்தனர். திருவோணம் அன்று (7 செப்டம்பர்) அப்யாசிகள் மாஸ்டரின் காட்டேஜின் வாசலில் பூக்கோலமிட்டனர். மாஸ்டர் இதைக் காண வெளியில் வந்து அனைத்து அப்யாசிகளுக்கும் வாழ்த்து தெரிவித்தார். மாஸ்டர் அப்யாசிகளுடன் பேசும் போது கலாச்சாரம், மொழி மற்றும் மதம் தாண்டிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையின் தேவை குறித்து பேசினார். அனைவருக்கும் ஓணம் வாழ்த்து தெரிவித்தார். ஆசிரம சமையலறையில், தன்னார்வ தொண்டர்கள் ஓணம் விருந்து தயாரித்தனர். ஞாயிறு சத்சங்கத்திற்கு வந்திருந்த சுமார் 3000 அப்யாசிகளுக்கு இது வழங்கப்பட்டது. மாலையில் அப்யாசி சகோதரிகள் கலை நிகழ்ச்சி வழங்கினர். இதை மாஸ்டர் காட்டேஜிலிருந்து கண்டார். 8ம் தேதி மேலும் ஒரு பூக்கோலம் இடப்பட்டது. மாஸ்டர் வெளியில் வந்து இதை கண்டார். மேலும் கேரளாவிலுருந்து வந்த அப்யாசிகளுடன் மாஸ்டர் காட்டேஜில் கலந்துரையாடினார்.

## தமிழ்நாடு மற்றும் கர்நாடகா பிரிபெக்ட் கருத்தரங்கு

**23-27 செப்டம்பர் 2014**

மணபாக்கத்தில் நடந்த 5 நாள் கருத்தரங்கில் சுமார் 400 பிரிபெக்ட்கள் பங்கேற்றனர். சகோ.கமலேஷ் நாள்தோறும் காலை 9 மணி சத்சங்கம் நடத்தி, 4 நாட்கள் உரையாற்றினார். மேலும் பிரிபெக்ட்கள் எழுப்பிய மிக முக்கியமான கேள்விகளுக்கு விடையளித்தார். மாஸ்டர் மூன்றாம் நாள் பிரிபெக்ட்களுடன் உரையாற்றியதில், கருத்தரங்கின் கருப்பொருளான அடக்கம் பற்றி பேசினார். அடக்கம் என்பது உட்புறமும், வெளிபுறமும் ஒன்றாக இருப்பதும், தனக்குத்தானே உண்மையாக இருப்பதாகும் என்று கூறினார். பிரிபெக்ட், மூத்த பிரிபெக்ட், செயலாளர், மிஷன் தலைவர் என்ற பாத்திரங்களை அவர் என்றும் பொருட்படுத்தியதில்லை. பாபுஜி மகராஜ் அவர்களின் சீடன் என்பது மட்டும் அவருக்கு போதுமானதாக இருந்தது. அவருடைய வாழ்க்கை எப்போதும் மிஷன் வேலையில் மட்டுமே குவிந்திருந்தது. வாழ்க்கையின் மிகப் பெரிய மகிழ்ச்சி பாபுஜி மகராஜ் அவர்களை காணப்போகும் போது, அவர்களின் முகத்தில் புன்னகையை காணும் வகையில் வேலை செய்வதேயாகும்; மாஸ்டருக்கு இதுவே மிக பெரிய விருது ஆகும். மாஸ்டர் பிரிபெக்ட்களுடன் கருத்தரங்கில் இருக்கமுடியாமல் போனாலும், கருத்தரங்கு உதவியாளர்களிடம் அன்றைய நாள் நடந்தவைகளைப் பற்றி கேட்டறிந்தார். மாஸ்டர் தனியாக பிரிபெக்ட்களுடன் உரையாடும் பொழுது, பிரிபெக்ட்கள் முன்மாதிரியாக விளங்க வேண்டியது முக்கியம் என்று கூறினார்.











'மாஸ்டரை உள்முகப்படுத்தி அவருடைய படிப்பினைகளை உள்ளத்தில் படிவப்படுத்தி வெளிப்படுத்தவேண்டும்' என்று அவர் கூறிய மிக ஆழமான வாக்கியம், நாம் அனைவரும் சிந்தித்து செயல்படுத்த வேண்டியதொன்றாகும்.

சகோ.கமலேஷ் அவர்களின் தொடக்க உரை அப்யாசிகளுடன் பிரிபெக்டுகளின் நடத்தையைப் பற்றியதாக இருந்தது. மிஷனில் தொடர்ந்து அப்யாசியாக நீடிப்பதற்கு ஆரம்ப அனுபவம் ஒரு முக்கிய காரணம் ஆகும். மற்ற நாட்களில், அப்யாசியின் உள்நிலையை எவ்வாறு ஆராய்வது? விஸ்பர்ஸின் முக்கியத்துவம், தீவிர மற்றும் முறையான பயிற்சியின் மூலம் தற்போதைய உலக மாற்றத்தில் அப்யாசியின் பங்கு ஆகிய தலைப்புகளில் உரையாற்றினார். மேலும் அவர், ஏற்றுக்கொள்ளுதலைப் பற்றியும் பேசினார். பணிவு, விசுவாசம் மற்றும் நேர்மை ஆகியவை நமக்கு எவ்வாறு ஏற்றுக்கொள்ளுதலுக்கு உதவுகிறது என்பதைப்பற்றி விளக்கினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக முண்கணிப்பு, வெறுப்பு, கணிப்புகள் ஆகிய மூட்டைகளை சேர்த்துக் கொள்கிறோம். நாம் அனைவரையும் சகித்துக்கொள்ளக் கற்றுக் கொள்ளும்போது, அது ஏற்றுக்கொள்ளுதலுக்கு வழிவகுக்கிறது.

மாஸ்டர் மற்றும் சகோ.கம்லேஷ் ஆற்றிய அனைத்து உரைகளும், தாய்மொழி மட்டுமே அறிந்துள்ள பிரிபெக்டுகளின் நன்மைக்காக, தமிழ் மற்றும் கன்னட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. குழுவிவாதங்கள், தனித்தியானங்களை ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளுதல் மற்றும் பல்வேறு வகையான தன்னார்வப்பணி ஆகியவை குழுவாக பணி செய்யும்போது எப்படி சுவாரசியமாகிறது என்பதை கற்பித்தன.

## அக்டோபர் 2014

### சீன கருத்தரங்கம் 2-6 அக்டோபர் 2014

சீனாவிலிருந்து 113 அப்யாசிகளும், துருக்கியிலிருந்து 3 பேரும், தென் ஆப்ரிக்காவிலிருந்து 16 அப்யாசிகளும் இந்த கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கத்தின் போது சகோ.கம்லேஷ் மூன்று நாட்கள் உரை நிகழ்த்தினார். அக்டோபர் 5ம் தேதி பங்கேற்பாளர்களுடன் கேள்வி பதில் நிகழ்ச்சி இருந்தது. இந்த ஊக்கமளிக்கும் நிகழ்ச்சி அனைவராலும் நன்கு பாராட்டப்பட்டு, மகிழப்பட்டது. கருத்தரங்கத்தின்போது இரண்டு நாட்கள் சீனா மற்றும் தென் ஆப்ரிக்க பிரிபெக்டுகள் கூட்டம் நடத்தப்பட்டு, முக்கியமான தகவல்கள் பகிரப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இறுதி நாள் மாலை நூலகத்தின் மேல் அரங்கில் சீன அப்யாசிகளால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு விருந்தில் அனைத்து பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டனர். சகோ.கம்லேஷ் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். அப்யாசிகள் ஒவ்வொரு நாள் மாலை சத்சங்கத்திற்குப்பிறகும் மாஸ்டருடன் தோட்டத்தில் சில நேரங்களில் மகிழ்ச்சியுடன் களித்தனர். 5 நாள் கருத்தரங்கத்திற்கு பிறகு 65 சீன அப்யாசிகள் அக்டோபர் 7 முதல் 11 வரை சத்கோல், இமயமலை ஆசிரமத்திற்கு சென்றனர்.








## VGTM மண்டல ஆசிரமம், ஆந்திரபிரதேசம்-முதலாம் ஆண்டு விழா

இவ்விழா செப்டம்பர் 7ம் தேதி ஞாயிற்றுக் கிழமை இம்மண்டலத்தின் அப்யாசிகளால் மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கொண்டாடப்பட்டது. 5 மையங்கள் மற்றும் 20 துணை மையங்களிருந்து ஏறத்தாழ 1000 அப்யாசிகள் கலந்து கொண்ட இவ்விழாவானது ஒரு சிறிய ஆன்மீக பெருவிழா (பண்டாரா) போல் இருந்தது. அங்கு 3 சத்சங்கங்களும் பல சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. அன்பு மற்றும் பக்தியை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களும், குண்டூர் மற்றும் விஜயவாடா மையங்களில் இருந்து வந்த குழந்தைகளால் பகவான் கிருஷ்ணர் மற்றும் கோபிகளை சித்திரித்து நடன நிகழ்ச்சியும், அப்யாசிகளால் பரவசமூட்டும் கவிதைகளும் பாடல்களும் பாடப்பட்டன. இவற்றின் மூலம் பங்கு கொண்டவர்களின் இதயங்கள் ஆன்மீக சுடர் ஒளியால் நிரம்பின.

## சகஜ மார்க்க வினா விடை நிகழ்ச்சி - நவசாரி, குஜராத்




நவசாரி மையத்தில் அக்டோபர் 2014, 5ம் தேதி அன்று வினா விடை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியான "உங்களில் யார் கோடீஸ்வரர்" என்ற நிகழ்ச்சியினைப் போன்று இது நடத்தப்பட்டது. இதன் காரணமாக அப்யாசிகளின் மத்தியில் அதிக உற்சாகம் எற்பட்டது. இதன் விளைவாக புதுமையான, அனைவரையும் கவர்கின்ற வகையில் புதிய வினா விடை நிகழ்ச்சி உருவானது. அப்யாசி சகோதரர்கள் இந்நிகழ்ச்சியினை கணினி மூலம் தயாரித்து இருந்தனர். அனைத்து கேள்விகளும் மிஷன் மற்றும் சகஜ மார்க்க சாதனாவின் அடிப்படையில் இருந்தன. இதில் விளையாட ஆர்வம் கொண்டவர்களிடம் இருந்து 9 அப்யாசிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வினா விடை நிகழ்ச்சி நடைபெற்ற போது, அங்கு இருந்த ஒவ்வொருவரும் மிகுந்த உற்சாகத்துடன் அதில் பங்கு கொண்டனர். மிஷன் புத்தகங்கள், மாஸ்டரின் புகைப்படங்கள், சிடி, டிவிடி, ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன.

## சேவை செய்ய தயார்படுத்துதல் - நந்தியால் ஆசிரமம் ஆ.பி.

செப்டம்பர் 12 முதல் 14 வரை மூன்று நாள் ஒன்று கூடும் நிகழ்ச்சி இம்மண்டலத்தில் சேவைபுரிகின்ற 170 தன்னார்வ தொண்டர்களுக்காக நடத்தப்பட்டது. பங்குபெற்ற அனைவரும் ஒரு மாத காலம் திறமையானவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தயார் செய்யப்பட்டனர். கமலேஷ் பாயின் நீங்காத அன்பான வழிகாட்டுதலின் கீழ் 15 நபர்கள் கொண்ட குழுவுடன் சகோ.கங்காதரா (மண்டலப் பொறுப்பாளர்) இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தார்.

அன்பு, சேவை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றினை முக்கியமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அதன் மீது கவனம் செலுத்தப்பட்டது. இத்தகைய பண்புகளை ஒருவர் அறிந்து கொண்டு அவற்றை அவர் வளர்த்துக் கொள்வதற்காக விடா முயற்சியுடன், ஒளி உலகத்தின் மென்குரல் செய்திகள், சமீபத்திய கிளிம்ப்ஸஸ், மாஸ்டரின் டி.வி.டிகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு நாளும் சத்சங்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பத்து நிமிட நேரம் அமைதிக்குப்பின்னர் கிளிம்ப்ஸஸ் காண்பிக்கப்பட்டது. தினமும் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் அதன் கருத்துக்கு ஏற்றார்போல் அமைந்த "மென்குரல்" வாசித்து, அதன்காரணமாக அவர்களுக்குள் ஏற்பட்ட அதிர்வுகளை உணர்ந்து, அவர்களின் உணர்வுகளையும் அனுபவங்களையும் எழுதும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களால் அவர்களின் உள் நிலையில் ஏற்பட்ட மாற்றத்தினை உணர முடிந்தது.

'Slices of Eternity' மற்றும் ஒருவர் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தாழம் மிக்க வீடியோக்கள் காண்பிக்கப்பட்டது. இது 'ஒரு சிட்டுக்குருவியால் கோடை காலத்தினை கொண்டு வர முடியும் மேலும் ஒரு மனிதனால் மாற்றத்தினை உருவாக்க இயலும்' என்று மாஸ்டர் சொல்லியதன் அடிப்படையில் இருந்தது. தினந்தோறும் நிகழ்ச்சிகளின் முடிவில் பிரபெக்ட்களின் கூட்டம் மற்றும் இளைஞர்களின் கூட்டம் ஆகியவை நடத்தப்பட்டன.

தன்னை மறந்து தன்மாஸ்டரை மட்டுமே நினைவில் கொண்டு நம் மாஸ்டர் மனித இனத்திற்கு செய்யும் சேவையினை உதாரணமாக எடுத்துக்கொண்டு, நாம் எந்த பணியினை செய்தாலும் அவரை நம் முன் கொண்டு வந்தால் மட்டுமே நாம் அவரைப் போன்று ஆக முடியும் என்று தெரிவிக்கப்பட்டது தான் மிகவும் முக்கியமான விஷயமாகும்.

நிகழ்ச்சி பற்றிய பின் கருத்தினை ஒரு வார காலத்திற்குப் பின்னர் பெறப்பட்டது. அப்யாசிகள் மாஸ்டரின் அன்பில் கரைந்து போயினர், முழு ஈடுபாடுடன் பயிற்சி செய்வதில் மிக்க ஆர்வம் கொண்டனர், அவர்கள் மையத்தில் வேலை செய்யும் போது அன்புடன் பணி செய்யவேண்டும் என்ற உணர்வினை வளர்த்துக் கொண்டனர்.

# பிரிபெக்ட் சந்திப்புக் கூட்டம்

## உத்தரகாண்ட்



உத்தரகாண்ட், 18ம் மண்டலத்தில் உள்ள மையப் பொறுப்பாளர்கள் மற்றும் பிரிபெக்ட்களுக்கான 2 நாள் சந்திப்புக் கூட்டம் ஒன்று மண்டலப் பொறுப்பாளர் அவர்களால் ஆகஸ்ட் 30, 31-ம் தேதிகளில் இமயமலை ஆசிரமமான சத்கோலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைசாரா அச்சூழலில் 18 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு, தத்தமது மையங்களில் நடைபெறும் பல்வேறு செயல்பாடுகளைப் பற்றிக் கலந்துரையாடினர். வேலை செய்யும் பொழுது நம் இதயத்தை எவ்வாறு இயல்பாகப் பயன்படுத்துவது என்பது குறித்த தெளிவான விழிப்புணர்வுடன் நிகழ்ச்சியானது நிறைவுற்றது. ஒருமித்த மற்றும் ஒற்றுமைக்கான ஒரு அருமையான பிணைப்பு அங்கு நிலவியது.

### காக்கிநாடா, ஆந்திரப்பிரதேசம்

ஆந்திரப்பிரதேசம், 1B மண்டலத்திலிருந்து 25 பிரிபெக்ட்கள் கலந்து கொண்ட சந்திப்புக் கூட்டம் காக்கிநாடா ஆசிரமத்தில் செப்டம்பர் 13ம் தேதி அன்று நடத்தப்பட்டது. காலை 9 மணி சத்சங்கத்திற்குப் பிறகு மண்டலப் பொறுப்பாளர் அவர்கள், பங்கேற்பாளர்களிடத்தில் உரையாற்றினார். சகோ.கம்லேஷ் அவர்களுடன் தான் கலந்துரையாடிய பொழுது பெற்ற அரிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். தனிதியானங்கள் எப்படி வழங்குவது, ஒருவரது நிலையை எப்படி அறிவது, தனிதியானங்கள் வழங்கும் பொழுது ஆலோசனைகள் வழங்குவதன் முக்கியப் பங்கு, பிரிபெக்ட்களின் குணநலன்கள் மற்றும் விஸ்பர்ஸ் செய்திகளின் முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகள் கலந்துரையாடப்பட்டன. காக்கிநாடா ஆசிரமத்திலிருந்து சுமார் 22 கி.மீ. தொலைவில் உள்ள அமரவில்லி ஆசிரமத்தில் மதிய சத்சங்கம் மற்றும் மதிய உணவிற்குப் பிறகு நிகழ்ச்சியானது நிறைவுற்றது. அடுத்த காலாண்டிற்கான சந்திப்புக் கூட்டமானது, விசாகப்பட்டினம், ஏ.ஜே.ஆர். நகரில் டிசம்பர் 13 அன்று நடத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.



### ராஜஸ்தான் (கிழக்கு) - பில்வாரா - மண்டலப் பொறுப்பாளர் அவர்களின் வருகை

மண்டலம் 7B க்கான மண்டலப் பொறுப்பாளர், டாக்டர். J. மதுகர் கோச்சார், செப்டம்பர் 28 அன்று, பிரிபெக்ட் சகோ.பூரண் மால் பைந்தா அவர்களுடன் பில்வாராவிற்கு வருகை தந்தார். அன்று 116 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். அவர்களிடத்தில் சகோ.கோச்சார், மாஸ்டருடனான தனது நினைவுகூரத்தக்க நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டார். மிஷனுக்குள் வருகின்ற அப்யாசிகளிடத்தில், அவர்கள் வருவதற்கு வெகுகாலத்திற்கும் முன்பே, மாஸ்டரின் வேலையானது தொடங்கி விடுகிறது என்று அவர் கூறினார். கேள்விகள் அல்லது விளக்கங்கள் தேவைப்பட்டால் கேட்கலாம் என்று கூறிய அவர் பிறகு கேள்விகள் இல்லாதிருப்பது கண்டு, கேள்விகளே இல்லாதிருப்பது ஆன்மீகத்தில் மிகச்சிறந்ததொரு நிலையாகும் என்று கூறி நிறைவு செய்தார். காலை உணவிற்குப் பிறகு, தற்போதுள்ள தியான மண்டபத்திலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள, ஆசிரமத்திற்கென முன்மொழியப்பட்ட நிலத்தினை அவர் பார்வையிட்டார். சுமார் அரைமணி நேரம் அங்கு செலவிட்ட பிறகு, நிலத்தைக் குறித்தும், அங்கு முடிக்கப்பட வேண்டிய சில சம்பிரதாயமான செயல்பாடுகள் குறித்தும் ஒரு விரிவான கலந்துரையாடலை நிகழ்த்தினார். பில்வாராவிற்கான அவரது வருகை, மிஷனிற்காக அயராது உழைக்கும் பொருட்டு, அப்யாசிகளுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது.

### நவராத்திரி விழா, வதோதரா, குஜராத்

அக்டோபர் 5 அன்று நவராத்திரி விழாவானது, வதோதராவில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களால் கொண்டாடப்பட்டது. சுமார் 50 பேர் பாரம்பரிய உடையணிந்து விழாவினைக் கொண்டாடினர். சத்சங்கத்திற்குப் பிறகு, குழந்தைகள் பாரம்பரிய கர்பா நடனத்தை, சுமார் ஒன்றரை மணிநேரம், மிகுந்த ஆர்வத்துடன், அன்பு மற்றும் சகோதர பாவத்துடன், தெய்வீக நடனமாக அரங்கேற்றி அதை மாஸ்டருக்கு அர்ப்பணித்தனர். குழந்தைகளின் சுறுசுறுப்பைப் பார்த்த முதிய அப்யாசிகளும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். ஒரு சிறிய இளைப்பாறுதலுக்குப் பிறகு அனைவரும் ஆசிரமத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.





## U - கனெக்ட் முயற்சி

### சுய மேம்பாடு பயிற்சி, சிக்கிம் பல்கலைக்கழகம்



சிக்கிம் பல்கலைக்கழகம் புதிதாக ஒரு பயிற்சி பாடத்தை நடைமுறைப்படுத்தியது. 'ஆன்மீகத்தின் வழியாக சுயத்தை மேம்படுத்துதல் - ஒரு செயல் அணுகுமுறை' என்பது, SRCMன் U-கனெக்ட் முயற்சியின் கீழ் தொடங்கப்பட்டது. இளைஞர்களுக்கு முன்னேறுவதற்கான ஆர்வத்தை அளிக்கக்கூடிய வாழ்க்கைக்கான நற்பண்புகள், ஆன்மீக ரீதியாக சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ அவர்களுக்கு உதவுதல் மற்றும் நன்னெறியுடன் கூடிய உலகாயத வாழ்க்கை வாழ்ந்து, நாட்டின் வளர்ச்சியில் பங்கெடுக்கச்செய்தல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியது. இந்தப் பயிற்சியானது மாணவர்களின் திறன்களை சுய ஆய்வு, ஆழ்ந்து சிந்தித்தல் மற்றும் தியானம் மூலமாக, பயனுள்ள சரியான நற்பண்புகளை கொண்டுவந்து, உள்ளார்ந்த தன்மை மாற்றத்தை இயல்பாகவே கொண்டுவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி பாடமானது சுயம், யோகா, தெய்வீக கருத்து, எண்ணங்களின் சக்தி, தியான பயிற்சிகள், வாழக்கைக்கான கருத்துக்கள் மற்றும் வாழ்தல், மேம்படுத்திக் கொள்ளுதல் மற்றும் விருப்பங்களை தேர்ந்தெடுத்து அன்பு செலுத்துதல் போன்ற பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியுள்ளது.

சகோ. ஹர்ஷல் ஐவேல் (புனே) மிஷல் மேத்தா (கொல்கத்தா) ரவி தெலால் (சிக்கிம்) மற்றும் சகோதரி. எலிசபெத் கிங்ஸ்நார்த் (சென்னை) அவர்களால் இந்தப் பயிற்சியானது செப்டம்பர் 6-ம் தேதி தொடங்கப்பட்டது. மாணவர்கள் நேர்மறையாகவும், ஊக்கப்படுத்தும் வகையில் இருப்பதாகவும் கருத்துக்களை தெரிவிக்கின்றனர். அவர்களும் பயிற்சியை அவர்கள் தேவைக்கேற்ப மாற்றியமைக்க உதவி செய்தனர்.

### உதவியாளர்கள் மற்றும் திறனாளர்கள் பயிற்சி முகாம்

#### புல்காவ் ஆசிரமம், மகாராஷ்டிரா

U-கனெக்ட் திறனாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான ஒரு பயிற்சிமுகாம் புல்காவ் ஆசிரமத்தில் ஆகஸ்ட் 17, 18 அன்று ஒருங்கிணைக்கப்பட்டது. நாக்பூர், சந்ராபூர், வார்தா, ராய்பூர் (சத்தீஸ்கர்), யவட்மல் மற்றும் புல்காவுனிலிருந்து வந்திருந்த தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீதர் தோடா (மும்பை) அவர்கள் அந்த நிகழ்ச்சிகளை வழங்கினார். சுதிர் ஜி. அகோஜ்வர் (மையப் பொறுப்பாளர் சந்ராபூர் மையம்) அவர்கள் பயிற்சி முகாமை ஒருங்கிணைத்தார். ஆர். ராஜேந்திரன் (மண்டல பொறுப்பாளர்) மற்றும் புல்காவுனிலிருந்து வந்திருந்த தன்னர்வத் தொண்டர்கள் உற்சாகத்துடன் பயிற்சி




முகாமிற்கு விருந்தோம்பல் செய்தனர். அப்யாசிகள் குழுவாக இணைந்து செயல்பட்டு, மாதிரி நிகழ்வுகள், விளையாட்டுகள் மற்றும் பல நிகழ்வுகளை அனைவருக்கும் வழங்கினர். ஒரு நிகழ்வு மட்டும் உள்ளூர் மொழியான மராத்தி மொழியில் வழங்கப்பட்டது. முடிவுரை நிகழ்ச்சியில் யு கனெக்ட்டிற்கு ஒரு வழிமுறை வரைபடம் திட்டமிடப்பட்டது. மற்றும் திறனாளர்கள் தங்களுடைய உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

#### நாச்சிப்பாளையம் ஆசிரமம், கோயமுத்தூர், தமிழ்நாடு

தமிழ்நாடு மற்றும் கேரளாவிலிருந்து வந்திருந்த 100 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்துகொண்ட, மூன்று நாள் பயிற்சி முகாம், ஆகஸ்ட் 15 - 17 வரை நாச்சிப்பாளையம் ஆசிரமம், கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது. ஒரு அறிமுக விளையாட்டு நடந்த பிறகு, சென்னையிலிருந்து வந்திருந்த சகோதரர்கள் ஸ்ரீராமன் மற்றும் கிருஷ்ணன் அவர்களால், யு கனெக்டின் உயரிய நோக்கம், கல்வி நிறுவனங்களை எவ்வாறு அணுகுவது, ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் பேச்சாளர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள் என்ன என்பது குறித்த நிகழ்வுகள் இருந்தது. மாதிரி நிகழ்வுகளையும் நடத்திக் காட்டினார்கள். பங்கேற்பாளர்கள் அனைவரையும் 12 குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் யு கனெக்ட் திட்டத்திலிருந்து ஒரு தலைப்பு வழங்கப்பட்டது.

இரண்டு மற்றும் மூன்றாவது நாட்களில் ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு தலைப்புகளில், மாதிரி நிகழ்வுகளை வழங்கினர். இந்த நிகழ்ச்சியானது கருத்துகளை பெறுதல் மற்றும் தங்களின் செயல்திட்டத்தை வரையறுத்தலோடு நிறைவு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியானது பங்கேற்பாளர்களுக்கு தைரியத்தையும், கல்லூரிகளில் நிகழ்வுகளை கையாளத் தேவையான திறன்களையும் அளித்தது.



இத்திட்டத்தை உங்கள் மையத்தில் எவ்வாறு தொடங்குவது என்பதற்கு, uconnect@srcm.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் அல்லது உங்கள் மண்டலப் பொறுப்பாளரை அணுகவும்.

# இளைஞர் நிகழ்ச்சிகள்

## திருச்சி, தமிழ்நாடு



ஆகஸ்ட் 16, 17-ம் தேதிகளில், திருச்சி ஆசிரமத்தில், மண்டலம் 2B-யைச் சேர்ந்த 18-35 வயதிற்குட்பட்ட 47 அப்யாசிகளுக்கு இரண்டு நாள் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சி, இயற்கை மருத்துவம், சுய தேடல், குழுப் பணி மற்றும் தலைமை, மற்றும் தன்னைத் தானே தயாராக வைத்திருத்தல் ஆகியவற்றின் மீதான செறிவூட்டும் பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. சமையலறை தன்னார்வலர்கள் 'நெருப்பின்றி உணவு' சமைத்திருந்தனர்.



தியானம் மற்றும் சகஜ மார்க்கப் பயிற்சியின் இளைஞர்களுக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பகுதிகளும் இருந்தன. ஆற்றப்பட்ட உரைகள், அவர்களின் ஆர்வத்தையும், துணிவுடன் மேற்கொண்டு செல்லும் உறுதிப்பாட்டையும் தூண்டிவிட்டு, மாஸ்டர் தாமே கூறியவாறு 'அக சிங்க'த்தை கர்ஜிக்க அனுமதிப்பதாக இருந்தது.

## பெங்களூரு, கர்நாடகா

செப்டம்பர் 21-ம் தேதி பன்சங்கரி ஆசிரமத்தில் 'தொடர்பு கொள்ளுதல்' என்ற தலைப்பின் மீதான ஒரு நாள் நிகழ்ச்சிக்காக பெங்களூருவிலிருந்து வந்த 35 இளைஞர்கள் கூடியிருந்தனர். சுயத்துடன் தொடர்பு கொள்ளுதல், பிறருடன் தொடர்பு கொள்ளுதல், (பிறர் பேசும்போது) கவனிப்பதன் பங்கு மற்றும் மற்றவர்களிடம் சகஜ மார்க்கத்தைப் பற்றி எவ்வாறு எடுத்துரைப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதே இந்நிகழ்ச்சியின் குறிக்கோளாக இருந்தது. தெளிவாகப் புரியும்பொருட்டு, ஒவ்வொரு பகுதியிலும் அத்தலைப்பைக் குறித்து மாஸ்டர் ஆற்றிய உரைகளின் ஒளிப் பட காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

'சுயத்துடன் தொடர்பு கொள்ளுதல்' என்ற தலைப்பின் பகுதியாக, ஆழ்ந்து சிந்தித்து, தியானிக்கும்பொருட்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு விஸ்பர்ஸ் செய்தி அளிக்கப்பட்டது. பிறகு, எண்ணங்களும் உணர்வுகளும் ஒரு பங்காளருடன் பகிர்ந்துகொள்ளப்பட்டன. 'பொறியை திருப்பிப்போடுதல்' என்ற விளையாட்டு, வெவ்வேறு நிலைகளுக்கும் சூழல்களுக்கும் ஏற்ற வெவ்வேறு விதமான தொடர்புகொள்ளலைப் பற்றி ஆய்வு செய்தது. மற்றொரு விளையாட்டு, ஒரு நல்ல கவனிப்பாளராக இருப்பதற்கான முக்கியத்துவத்தையும் திறன்களையும் எடுத்துக்காட்டியது.

ஒவ்வொரு குழுவிற்கும், ஒரு குறிப்பிட்ட அவையினருக்கு மாஸ்டர் ஆற்றிய ஓர் உரை அளிக்கப்பட்டது. அதைப் பற்றி கலந்துரையாடியபின், ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு நபர் பேசினார். பிறகு, எவ்வாறு ஒரே வார்த்தை வெவ்வேறு குரலேற்றத்தாழ்வுகளுடனும் முக பாவனைகளுடனும் உச்சரிக்கப்படும்போது, அதன் அர்த்தம் மாறுபடுகிறது என்பதைக் காண்பிக்க 'ஓ' விளையாட்டு விளையாடப்பட்டது.

பங்கேற்பாளர்களுக்கு, சகஜ மார்க்கத்தின் அடிப்படை தத்துவத்தை புரிந்துகொள்ள உதவும், 'அவசியம் வாசிக்க வேண்டிய' புத்தகங்களின் பட்டியல் ஒன்று கொடுக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில், தன்னார்வப் பணிகளை முடித்த பிறகு நேரமிருப்பவர்கள் ஒன்றுகூடி, அரைமணி நேரம் (இப்புத்தகங்களை) வாசிக்கலாம் என்று ஆலோசனை வழங்கப்பட்டது.

## கட்டுரை மதிப்பீட்டு பட்டறைகள்

கட்டுரை மதிப்பீடு செய்தல் பணிமனை அண்மையில் முடிவுற்ற கட்டுரைப் போட்டி 2014-ன் கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் பணி மண்டல அளவில் நடத்தப்பட்டது.

### போபால், மத்திய பிரதேசம், மண்டலம் 8A

மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டு முறைகளின் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு இது நடத்தப்பட்டது. சில உரைகளைத் தொடர்ந்து, ஒவ்வொருவரும் ஒரு வினாத்தொடரை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்; இது பல சந்தேகங்களைப் போக்கியது. மதிப்பீடு செய்வதற்காக, அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் மாதிரிக் கட்டுரைகள் வழங்கப்பட்டன; பின்னர் மதிப்பீட்டு அளவுகோல் மற்றும் முறைமை கொடுக்கப்பட்டது. அதன் பிறகு, தாங்கள் கற்றுக்கொண்டதை வைத்து அதே கட்டுரைகளை மறுமதிப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஒரு பொது உரையாடல் பகுதி மற்றும் நிகழ்ச்சி எளிதாக்குநர்களின் பின்கருத்துடன் பணிமனை நிறைவுற்றது. சுதர்ஷன் சிங் (பஹேரி மையம்), மரு. ராஜீவ் குமார் (ஆக்ரா மையம்) மற்றும் வினோத் குமார் (சீதாப்பூர் மையம்) ஆகியோர் எளிதாக்குநர்களாக விளங்கினர்.

### காசியாபாத், உத்திர பிரதேசம், மண்டலம் 12A

செப்டம்பர் 27, 28-ம் தேதிகளில், மொத்தம் 700 கட்டுரைகளிலிருந்து 450 கட்டுரைகள் முதற்கட்ட ஆய்வு செய்யப்பட்டு அதிலிருந்து சுமார் 40 கட்டுரைகள் சென்னை, மணப்பாக்கத்திலிருக்கும் உலகத் தலைமையகத்திற்கு அனுப்பும்பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்டன. அருகிலுள்ள மையங்களிலிருந்து ஏறத்தாழ 50 அப்யாசிகள் மதிப்பீட்டாளர்களாக வந்திருந்தனர்.





# ஒருவரின் சாதனாவை ஒழுங்குபடுத்துதல்

## குர்காவ், டெல்லி

சீர்படுத்தப்பட்ட பயிற்சி என்ற தலைப்பில் தொடர் வகுப்புகள் ஹிந்தி மொழியில் ஒவ்வொரு ஞாயிறு காலையிலும், டெல்லியிலுள்ள மண்டல ஆசிரமத்தில் நிகழ்த்தப்படுகின்றன. ஆகஸ்ட் மாதம் துவங்கப்பட்ட இந்த 3 மணி நேர வகுப்புகள் சத்சங்கத்திற்குப்பின் நடைபெறுகின்றன. சகஜ மார்க்கப் பயிற்சியின் அடிப்படை, குரு, சகோதரத்துவம், நாட்குறிப்பு எழுதுதல், சுத்திகரிப்பு, நன்னடத்தை ஏற்படுத்திக் கொள்ளுதலின் சாதனங்கள் மற்றும் தியானம் ஆகிய தலைப்புகள் இதுவரை விவரிக்கப்பட்டுள்ளன. 10 நியமங்கள் பற்றிய பகுதி அக்டோபர் மாதத்திலிருந்து தொடங்கப்படவுள்ளது. அப்யாசிகளுக்கு அவர்களது பயிற்சியில் ஒரு புதிய உத்வேகத்தையளிப்பது தான் இதன் நோக்கமாகும். இந்தப் புது முயற்சியானது, அப்யாசிகளுக்கு சகஜ மார்க்க பயிற்சி முறையைப் பற்றிய ஒரு தெளிவைக் கொடுத்ததோடல்லாமல், அவர்கள் திறந்த மனதோடு கலந்துரையாடுவதற்கும், சகோதரத்துவத்தை அனுபவித்துப் புரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கிறது.



## ஓங்கோல், ஆந்திரப்பிரதேசம்

பயிற்சியைச் சீர்படுத்தும் ஒரு முயற்சியாக செப்டம்பர் 28 - அக்டோபர் 4 வரை ஒரு 7 நாட்கள் நிகழ்வு நடத்தப்பட்டது. 18 அப்யாசிகள் இதில் கலந்து கொண்டனர். நிலையான நினைவை உள்ளடக்கிய பயிற்சியின் அனைத்து அங்கங்கள், பத்து நியமங்கள் ஆகியவை தீவிரமான ஆர்வத்துடன், ஒலி ஒளிக்காட்சிகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாகவும் வழங்கப்பட்டன. மையப் பொறுப்பாளர் சகோ. M. பாஸ்கர் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு அப்யாசிகளை உற்சாகப்படுத்தினார்.

## கருமாத்தம்பட்டி, தமிழ்நாடு மேற்கு

கோயமுத்தூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள கருமாத்தம்பட்டி மையத்தில், சகோதரி



முத்துலட்சுமியால் செப்டெம்பர் 21ஆம் தேதியன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்" என்னும் நிகழ்ச்சியில் 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகஜ மார்க்கத்தை அனுசரித்த பிறகு ஒருவர் தனக்குள் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கூர்ந்து நோக்கிப் புரிந்து கொள்ளுதல் என்பது தான் இந்த நிகழ்ச்சியின் மையக் கருத்தாகும். அப்யாசிகள் கூறிய குணநலன்களாவன: மாஸ்டர் மீது அன்பு மற்றும் நம்பிக்கை வளர்தல், கோபத்தைக் குறைத்துக் கொள்ளுதல், பொறாமை உணர்வுகள் மிதமாகிப் போதல், மிகையான பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை, அதிகமாகிய தன்னம்பிக்கை, குறைந்த அளவு கவலைகள், உயர்ந்த எளிமை மற்றும் பலமான சகோதரத்துவம் ஆகியவை ஆகும். ஒவ்வொருவரின் அனுபவங்களைக் கேட்பதற்கும் மிகவும் சுவாரசியமாக இருந்தது. அப்யாசிகள் அனைவரும் இந்த நிகழ்ச்சியை மிகவும் ரசித்தனர்.



## குல்பர்கா, கர்நாடகா

செப்டெம்பர் 6-7 தேதிகளில் "மிஷனின் இலக்கியங்களைப் படிப்பதன் முக்கியத்துவம்" பற்றிய ஓர் நிகழ்ச்சி ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. குல்பர்கா, பீதர், ஹம்னாபாத், சாங்க்லர், சித்தாபுர், சேடம், சிங்கோலி, ஷோராபுர், கோகி மற்றும் பிற மையங்களிலிருந்து சுமார் 150 அப்யாசிகள் கலந்து கொண்டனர். காலை சத்சங்கத்திற்குப் பிறகு, ஒரு விரிவான பகிர்ந்தளிப்புகள், நிறைய உதாரணங்கள், வடிவ வரைவுப் படங்கள், மாஸ்டரின் சொற்பொழிவுகளிலிருந்து ஒலி ஒளிக்காட்சிகள் போன்றவை காண்பிக்கப்பட்டன. இந்த வகுப்புகள் மாலை சத்சங்கத்துடன் முடிவுற்றன. எல்லா அப்யாசிகளும் இந்த நிகழ்விலிருந்து, நிரம்ப ஆனந்தத்தையும், சிறந்த பலனையும் பெற்றதாக கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

## திருச்சி, தமிழ்நாடு கிழக்கு

மையங்களின் ஒரு நாள் ஒருங்கு சேர்தல் கூட்டம், செப்டெம்பர் 14 ஆம் தேதியன்று நடைபெற்றது. மண்டலம் 2B யில் அடங்கியுள்ள மையங்கள், விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகும். இந்த மூன்று மையங்களும் சேர்ந்து 3-4 மாத கால இடைவெளியில் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்காக, ஒரு நாள் நிகழ்ச்சியை, ஒவ்வொரு மையமும் தனித்தனியே நடத்தி வருகின்றன.இந்த கருத்தரங்குகளின் பொருளானது, "இலட்சியத்தை அடையும் வழியில்" என்பது ஆகும். ஒவ்வொரு மையமும் பின்வரும் தலைப்புக்களைத் தயார் செய்து கொண்டு வந்திருந்தது. சகிப்புத்தன்மை, மன உறுதி, சரணாகதி, சேவை, கீழ்ப்படிதல், பற்றுறுதி மற்றும் திடநம்பிக்கை, கூட்டு முயற்சி மற்றும் சகோதரத்துவம், அன்பு ஆகியவை. அந்த நாள் இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் கலை நிகழ்ச்சியுடன் துவங்கியது. கருத்தரங்கம், இறுதியில் சத்சங்கத்துடன் முடிவுற்றது.

## கடலூர், தமிழ் நாடு கிழக்கு



21 செப்டம்பர் அன்று நடந்த வருடாந்திரக் கூட்டத்தில், விழுப்புரம், நெய்வேலி, பாண்டிச்சேரி, கடலூர் மற்றும் வேறு உப மையங்களில் இருந்து, சுமார் 120 அப்பியாசிகள் பங்கேற்றனர். SMSFற்கு தியானக் கூடத்தை நன்கொடையாக அளித்தபின், இதுவே அங்கு பெரிய அளவில் நடக்கும் முதல் நிகழ்ச்சியாகும்.' சகஜ மார்க்கத்தின் அடிப்படைகள்' பற்றிய குழுக் கலந்துரையாடலுக்குப்பின், 'மெய்நிலையறிதல்' பற்றிய உரை இருந்தது. "India In The West" DVD காண்பிக்கப்பட்டது. சகோ. பிரசாந்த் வாசு எழுதியுள்ள புத்தகமான " At the feet of the Master- The becoming of a disciple" பற்றிய கருத்துரையை, கடலூரைச் சேர்ந்த இரு அப்யாசிகள் வழங்கினர்.

## வதோதரா- குஜராத்



வதோதரா நகரம் 7மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும், குறிப்பிட்ட செயல்பாட்டைப் பொறுப்பேற்றுள்ள ஒரு தொண்டர் குழு வழங்கப்பட்டுள்ளது. சாதனாவின் திறனை மேம்படுத்த, இல்லக்கூட்டங்கள், வரவேற்புக்கூட்டங்கள் மற்றும் பல செயல்பாடுகள் நடத்தப்படுகின்றன. செப்டம்பர் 13 அன்று, மகர்புரா மற்றும் மஞ்சல்பூரைச் சேரந்த சுமார் 45 அப்யாசிகள், " வாழ்வின் குறிக்கோள்" என்பது மீதான ஒரு கருத்தரங்கிற்கு ஒன்று கூடினர். சத்சங்கத்திற்குப்பிறகு, அப்யாசிகள் தங்கள் குறிக்கோள் பற்றி டைரியில் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன் பிறகு, அவர்களுக்கு, தீர ஆலோசிக்க 3 கேள்விகள் கொடுக்கப்பட்டன. 'சத்யோதயம்' புத்தகத்தில், " வாழ்வின் குறிக்கோள்" என்ற அத்தியாயத்தின் ஒரு பத்தியை வாசித்துக் கேட்டபிறகு, பங்கேற்பாளர்கள் அவர்கள் புரிந்து கொண்டதைப் பகிர்ந்து கொள்ள, சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அதைப் பற்றி ஒரு பிரிபெக்ட் சகோதரர் பேசியதைத் தொடர்ந்து, அப்யாசிகள் தங்கள் அனுபவங்களை மற்ற ஒருவருடன் பகிர்ந்து கொண்டனர். இறுதியில், அவர்கள் மறுபடியும், " வாழ்வின் குறிக்கோள்" பற்றி, புதிதாகப் புரிந்து கொண்டதன் அடிப்படையில், தங்கள் டைரியில் எழுதினர். இம்முகாம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.



## திருப்பூர்- தமிழ் நாடு மேற்கு

செட்டிப்பாளையம் ஆசிரமத்தில், அக்டோபர் 5ம் தேதி, காலை சத்சங்கத்திற்குப்பின், செப்டம்பர் இறுதியில், மணப்பாக்கத்தில் நடைபெற்ற பிரிபெக்ட் கருத்தரங்கு பற்றிய ஒரு சிற்றுரையை சகோ. பிரகாஷ் வழங்கினார். காலை உணவிற்குப்பின், அங்கிருந்த 600 அப்யாசிகளும், தாங்கள் தனி சிட்டிங் எடுத்துக்கொள்ளும் பிரிபெக்ட்களுடன் குழுக்கள் அமைத்துக் கொண்டனர். தியானப் பயிற்சியை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யும்படி சகோ. கம்லேஷ் வலியுறுத்தியுள்ளதை பிரிபெக்ட்கள் விவரித்தனர். இல்லங்களில் தியானம் செய்ய முடியாத அப்யாசிகள், ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து ஒன்றாகத் தியானம் செய்ய ஆலோசனை வழங்கப்பட்டது. பயிற்சியில் தீவிரத்தை ஏற்படுத்துவதே முக்கியமான குறிக்கோள் ஆகும். பயிற்சியின் பலனைக் காண, குறைந்தது பத்து நாட்களுக்காவது, தீவிரமாகப் பயிற்சி செய்ய வேண்டும் என்பதே சகோ. கம்லேஷின் அறிவுரையாகும். இந்த கலந்துரையாடலுக்குப்பின், பயிற்சியை மேலும் சிறப்பான முறையில் செய்வதைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் அப்யாசிகள் திரும்பினர். தற்சமயம், நகரின் இரண்டு இடங்களில் தினமும் காலை 6 மணிக்கு சத்சங்கம் நடைபெறுகிறது.

## விட்டல், கர்நாடகா கடற்கரைப் பகுதி

செப்டம்பர் 21ம் தேதி, "குறிக்கோள்" என்ற பொருள் பற்றிய முழுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்ற 12 அப்யாசிகள், பயிற்சியின் முன்னேற்றத்துடன், "\குறிக்கோள்" பற்றிய தங்கள் கருத்துக்கள் எவ்வாறு மாறியுள்ளன என்பது பற்றிய தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பாபூஜி மகராஜின் புத்தகங்களிலிருந்து சில பகுதிகளைப் படித்தபின், வாழ்வின் உண்மையான குறிக்கோள் மாஸ்டரே என்பதை அப்யாசிகள் உணர்ந்து கொண்டனர். குறிக்கோளை அடைவது பற்றிய பல்வேறு முறைகளைப் பற்றிக் கலந்துரையாடியபின், பிரார்த்தனையின் முதல் வரியான" மனித வாழ்வின் உண்மையான லட்சியம் நீரே" என்பதன் பொருள் பற்றிய எண்ணங்களின் பிரதிபலிப்புடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



## பயிற்சி முறையின் அடித்தளம்

இந்தியாவின் பல மையங்களில் இப்பயிற்சி முறை நிகழ்ச்சிகள் முழுவீச்சுடன் நடந்து கொண்டிருக்கின்றன. இப்பயிற்சியில் தியானம்,சுத்தகரிப்பு, தினக்குறிப்பு எழுதும் முறை மற்றும் பிரார்த்தனை என்ற நான்கு அங்கங்கள் அடங்கியுள்ளன.



பிகானீர

செப்.26ம் தேதி, ராஜஸ்தான், **பிகானீரி**ல் நடந்த இம்முகாமில் பிகானீர், லாட்னன் ஜஸ்வந்த்கர், தீத்வானா, குசேரா மற்றும் ஸ்ரீகங்காநகர் முதலான மையங்களிலிருந்து 85 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.



கோவா

ஆகஸ்ட் 16 - 17 தேதிகளில் **கோவா**வில் நடைபெற்ற பயிற்சி முகாமில் கோவா, சாராவர், கோலாப்பூர் மையங்களிலிருந்து 32 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.



த்ரிப்ரயார்

அக்டோபர் 12ம் தேதி, கேரளா, **த்ரிப்ரயார்** ஆசிரமத்தில் நடைபெற்ற முகாமில் 34 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.



ஹாபூர்

செப்டம்பர் 7ம் தேதி உ.பி. **ஹாபூர்** ஆசிரமத்தில் நடைபெற்ற முகாமில் 87 அப்யாசிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## செய்தியைப் பரப்புதல்

'எக்கோஸ்' குழுவிற்கு, இந்தியாவின் பல்வேறு மையங்களில் நடைபெற்ற வரவேற்பு கூட்டங்கள் பற்றிய ஏராளமான கட்டுரைகள் வந்துள்ளன. அதிலிருந்து சில புகைப்படங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன



ஆக்ரா



குவாலியர்



புளியம்பட்டி



கட்டாவ்லி



வல்சத்





பில்வாரா

## புதிய வெளியீடுகள்



வாட் இஸ் சகஜ் மார்க் ஆங்கிலம்


வாட் இஸ் சகஜ் மார்க் கன்னடம்



டிவோஷன் ஆங்கிலம்




ஹார்ட் ஸ்பீக் 2011 மராத்தி



ஹார்ட் ஸ்பீக் 2013 ஆங்கிலம்



ஹார்ட் ஸ்பீக் 2011 ஹிந்தி



மை மாஸ்டர் MP3 ஆடியோ புத்தகம் குஜராத்தி

## துணுக்குகள்




### பலியா,உத்திரப்பிரதேசம்

செப்டம்பர் 14ம் தேதியன்று பலியாவிலுள்ள பாலிடெக்னிக் கல்லூரியில் இளைஞர் கருத்தரங்கு நடைபெற்றது. 'இளமை : வாக்குறுதி மற்றும் உழைப்புக்கான நேரம்' என்ற கருப்பொருளில் நடந்த இக்கருத்தரங்கத்தில் சுமார் 100 மாணவர்களும், 25 ஆசிரியர்களும், மற்றும் காப்பாளர்களும் கலந்து கொண்டனர்.



### குழந்தைகள் மற்றும் இளைஞர் மையம், கொல்கத்தா

கொல்கத்தா ஆசிரமத்திற்கு வருகை புரியும் குழந்தைகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, பூஜ்ய மாஸ்டரின் அருளுடனும், அனுமதியுடனும், குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மைய (Children and Youth Centre -CYC) அறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்த திறந்த வெளியில் ஒரு எளிமையான அறை கட்டப்பட்டது. செப்டம்பர் 14ம் தேதியன்று கொல்கத்தா ஆசிரமத்தில் குழந்தைகள் மற்றும் இளைஞர் தன்னார்வத்தொண்டர்கள் வழிகாட்டியபடி, குழந்தைகள் ஒரு எளிய விழா கொண்டாட, இவ்வறை திறந்து வைக்கப்பட்டது.

## நன்னெறிக் கல்வி பயிற்சித்திட்டம் - சமீபத்திய தகவல்கள்

### புது தில்லி

2014, ஏப்ரல் மாதத்தில் இந்நிகழ்ச்சி 'Ambience Public School'லில் தொடங்கப்பட்டு, வாரத்திற்கு ஒரு வகுப்பு நடத்தப்படுகிறது. ஆரம்பத்தில் ஆர்வம் காட்டாத போதிலும், மூன்று வகுப்புகள் முடிந்த நிலையில், 8-12ம் வகுப்பு மாணவர்கள் இப்பாடத் திட்டத்தில் ஆர்வம் கொண்டனர். தைரியம், நேர்மை, மற்றும் எளிமை என்ற நன்னெறிகளில் இதுவரை பாடங்கள் நடத்தப்பட்டுவிட்டன. எளிமை ஒரு நன்னெறி என்பதை அவர்கள் ஏற்க மறுத்தனர். இவ்வகுப்புகளிலிருந்து ஒவ்வொரு மாணவனும் கொஞ்சமாவது பயனடைந்திருப்பான்.

இரண்டாவதாக, மேற்கு தில்லியிலுள்ள வித்யா பாரதி பள்ளியில், 2014 ஜூலை யில் 8, 9 வது வகுப்புகளில் இது ஆரம்பிக்கப்பட்டது. ஏராளமான மாணவர்களை கொண்ட இப்பள்ளியில், இவ்விரண்டு வகுப்புகளிலுமே 7 பிரிவுகள் உள்ளன. அதில் சுமார் 400 மாணவர்கள் உள்ளனர். இவ்விரண்டு பள்ளிகளும் தில்லியின் வெவ்வேறு பகுதிகளிலும், சமூக மற்றும் கலாச்சாரங்களில் வேறு பட்டும் இருந்தாலும் அவர்களின் ஏற்புத்தன்மை ஏறத்தாழ ஒரே மாதிரியாகவே இருந்தது.

### மும்பை, மஹாராஷ்ட்ரா

நாகோதாணே, JH Ambani Vidhya Mandir மராத்தி மொழி பள்ளியில் ஆகஸ்ட் 27ம் தேதி நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 45 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி, சீமா திரிபாதியால், மென்மையாகவும் ஆனால் தாக்கமிக்கதாகவும் நடத்தப்பட்டது. நிகழ்ச்சி முடியும் தருவாயில் சில ஆசிரியர்கள் தியான முறை பற்றி வினவினர்.5-6 ஆசிரியர்கள், தன்னர்வத்தொண்டர்களுக்கு உதவி செய்வதாக உறுதி அளித்தனர். மற்றும் 8ம் 9ம் வகுப்புகளுக்கு நன்னெறி கல்வி முறையில் பாடம் நடத்த வழிமொழிந்தனர். பள்ளி முதல்வர் பேசும் பொழுது, மாணவர்களை முழுமையான மனிதத்தன்மை கொண்ட மனிதர்களாக உருவாக்குவதில் நன்னெறிக் கல்வி முறை மிக முக்கியமான ஒன்றாகும் எனக்குறிப்பிட்டார். தன்னார்வத்தொண்டர்களுக்கு அவர் உதவி செய்வதாகவும் உறுதி அளித்தார்.

உங்கள் மையத்தில் உள்ள பள்ளியில் நீங்கள் நன்னெறி கல்வி நிகழ்ச்சி தொடங்க விரும்பினால், vbe@shpt.in என்ற மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும் அல்லது உங்கள் மண்டல் பொறுப்பாளரை அணுகவும்.

# சோழவந்தான் ஆசிரமம் - தமிழ்நாடு

ஒளி மையம்





சோழவந்தான் ஒரு பேரூராட்சி. இது மதுரையில் இருந்து 28 கி.மீ தொலைவில் உள்ளது. ஆரம்பத்தில் டாக்டர் சடையாண்டி அவர்களின் இல்லத்தில் 1987 ஆகஸ்ட் 5ம் தேதி SRCM மையம் தொடங்கப்பட்டது. ஆரம்ப நாட்களில் ஏறத்தாழ 15 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். 1970,1980 களில் மாஸ்டர் பல முறை சோழவந்தான் வந்து டாக்டர் சடையாண்டியின் இல்லத்தில் சத்சங்கம் நடத்தி உள்ளார். அவர் இம்மையத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தனிப்பட்ட அக்கரை காட்டினார்.



## ஆசிரமம்

ஒரு ஆசிரமம் தேவை என உணர்ந்த போது டாக்டர் சடையாண்டி சோழவந்தான் இரயில் நிலையத்திற்கு அருகாமையில் 2 ஏக்கர் 43 சென்ட் நிலத்தினை வாங்கினார். அதில் 1ஏக்கர் 20 சென்ட் நிலம் ஆசிரமத்திற்கு கொடுக்கப்பட்டது. 1996ல் தலைமையகத்தில் இருந்து வரப்பெற்ற நிதி உதவி மற்றும் அப்யாசிகள் வழங்கிய நன்கொடைகள் ஆகியவற்றினைக் கொண்டு ஆசிரமம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. கட்டுமான பணியின் போது இணை செயலாளர் சகோ.ஏ.பி.துரை 1998 ஆகஸ்ட் 24ல் ஆசிரமத்தினை பார்வையிட்டுத் தேவையான உதவிகளை அளித்தார். ஆசிரமம் 1999 மே 12ம் தேதி பதிவு செய்யப்பட்டு, 2000 ஜனவரி 12ம் தேதி, மாஸ்டரால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவின் போது 300க்கும் அதிகமான அப்யாசிகள் பல மையங்களில் இருந்து வந்திருந்தனர்.



தியானக்கூடம் 52க்கு 22 அடி என்ற அளவில் ஏறத்தாழ 200 அப்யாசிகள் அமரத்தக்கவகையில் உள்ளது. கூடவே சமையல் அறை, நூலகம், கழிப்பிட அறைகள் ஆகியவை ஆசிரமத்திற்குள் அமைக்கப்பட்டுள்ளன. அறிமுக கூட்டங்கள் பல நடத்தப்பட்டு அப்யாசிகளின் எண்ணிக்கை ஒரேசீராக உயர்ந்து தற்போது மையத்தில் ஏறத்தாழ 110 அப்யாசிகள் இங்கு நடைபெறும் ஞாயிறு சத்சங்கங்களில் தொடர்ந்து கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையும் முழு நேர நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு நான்காம் ஞாயிறும் தன்னார்வ தொண்டர்களின் பணி நடைபெறுகிறது. இந்த மையத்தில் திறன்மிக்க இளைஞர்கள் குழு உள்ளது. அவர்கள் ஆன்மீக விழிபுணர்வினை பரப்பி வருகின்றனர். CREST நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர், பயிற்சியினைப்பற்றிய நாடகங்களை நடத்துகின்றனர், குழு விவாதங்கள் மற்றும் திறன் வளர்ச்சி நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். இந்த மையம் அருகாமையிலுள்ள திண்டுக்கல், வத்தலகுண்டு மற்றும் வாடிப்பட்டி ஆகிய துணை மையங்களை அவற்றின் ஆரம்ப நிலைகளின் போது கவனித்துக்கொண்டது.



To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2014 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.